# செம்பதாகை

மலர் 2
இதழ்: 6–7
1981 ஆனி-ஆடி
விலை சதம்: 75
புரட்சிகர வெகுஜன ஏடு


## யூ. என். பி. ஆட்சி கட்டவிழ்த்து விட்ட

# தார்மீகப் பயங்கரவாதம்!

### பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்கு!

### மேலதிகப் படைகளை வாபஸ் வாங்கு!

### ஆணைக்குழு என்பது வெறும் கண்துடைப்பு

கடந்த மே மாதம் 31ம் திகதி தொடக்கம் யூன் 7ம் திகதி வரை யாழ் குடா நாட்டிற்குள் தார்மீகப் பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. திட்டமிட்டே நடத்தப்பட்ட இப்பயங்கரவாதத்தால் கொலை, கொள்ளை, தீவைப்பு, தாக்குதல்கள், வழிப்பறி, சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டமை போன்ற வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன. இச்சம்பவங்களின் பின்னணியில் அரசும், யூ. என். பியும் நின்றிருக்கின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

குடாநாட்டிற்குள் கட்டவிழ்ந்து விடப்பட்ட இப்பயங்கரவாதத்தால் ஆயுதப் படைகளின் துப்பாக்கி ரவைகளுக்குப் பலர் பலியானார்கள். யாழ்ப்பாண நகரத்திலும் ஏனைய நகரங்களிலும் உள்ள பல கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. யாழ் நகரப் பெரும் சந்தையில் எஞ்சியிருப்பது கல்தூண்கள் மட்டுமே. மிலேச்சத்தனமான முறையில் பெறுமதிவாய்ந்த யாழ் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தமிழ்த் தினசரியான ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் முற்ருக எரிக்கப்பட்டது. யாழ் பாராளுமன்ற உறுப்பினரின் வீடும் தீ வைத்து கொளுத்தப்பட்டது. பலவீடுகள் உடைக்கப்பட்டு, வேலிகள் கொளுத்தப்பட்டு சேதங்கள் விளைவிக்கப்பட்டன. வீதிகளின் ஆங்காங்கே பல மோட்டார் வாகனங்கள் வழிமறித்து கொளுத்தப்பட்டன. மக்கள் கேள்வி நியாயம் இன்றி ஆயுதப்படைகளால் தாக்கப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டனர். சில இளைஞர்களுக்கு என்ன நடந்ததென்றே தெரியவில்லை. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசம் ஒன்றில் ஆக்கிரமிப்புப் படைகள் நடத்தக்கூடிய அத்தனை காட்டுமிராண்டித் தனங்களையும் ஒரு வாரகாலமாக மக்கள் கண்முன்னே கண்டு அனுபவிக்க நேரிட்டது. இச் சம்பவங்களின் உச்ச கட்டத்தில் தான், அதாவது யூன் 4ம் திகதி முதலாளித்துவ ஜனநாயகத்தின் கேலிக் கூத்தை அப்பட்டமாக நிர்வாணப் படுத்திய மாவட்ட சபைத் தேர்தல் நடந்தது.

இப் பயங்கரவாதச் சம்பவங்களுக்கு பொறுப்புதாரிகள் யார்? ஒரு சில எண்ணிக்கை கொண்ட பொலிசார் மட்டுமே என்று ஆட்சியினர் காட்ட முற்படுகிறார்கள். அதை ஒத்துக் கொள்வது போல் தமிழ்த் தலைவர்களும் பேசி, வருகின்றனர். ஆனால் உண்மை அவ்வாறு இருக்க முடியாது. அரசாங்க மட்டத்திலும் யூ.என்.பியின் உயர் மட்டத்திலும் நன்கு திட்டமிடப்பட்டு இச் சம்பவங்கள் முடிக்கி விடப்பட்டுள்ளன என்றே மக்கள் நம்புகின்றனர். ஆயுதப்படைகளைச் சேர்ந்தவர்களும், வெளியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குண்டர்களும் இப் பயங்கரவாதச் செயல்களுக்கு பாவிக்கப்பட்டுள்ளனர். சிலர் கூறுவது போல் யாழ் நகரத்தில் ஒரு மதுபானக் கடையை உடைத்து அம் மதுவை அருந்திய வெறியினால் மட்டும் பொலீஸ் காடையர்கள் வன்செயலை நடாத்தவில்லை. அரசினதும் யூ.என்.பி. யினதும் வழிகாட்டலின் கீழ் தான் அவை செய்யப்பட்டுள்ளன. அரசுக்கும் யூ. என். பிக்கும் இவ்வன்முறைச் சம்பவங்களில் துளியேனும் சம்பந்தம் இல்லை என்ருல், வன்முறைச் சம்பவங்கள் ஆரம்பித்த

(6-ம் பக்கம் பார்க்க)

# 70-ரூபா சம்பள உயர்வு அவசியம் இல்லையாம்!

### செல்லச்சாமி சொல்கிருர்

இன்றைய வாழ்க்கைச் செலவின் உயர்வுக்கு ரூபா 500 சம்பள உயர்வு கொடுத்தாலும் கூட ஈடு செய்ய முடியாது என்பதே தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற் சங்கங்களினதும் அதன் தலைவர்களினதும் கருத்தாகும். ஆனால் தொழிலாளர் விரோத யூ.என்.பி ஆட்சிக்கு வக்காலத்து வாங்கும் இ.தொ.காவும் அதன் தலைவர்களும் சம்பள உயர்வு என்ற பேச்சை எடுக்கவே மறுக்கின்றனர்.

அண்மையில் வீரகேசரிப் பத்திரிகையில் இ. தொ. கா பொதுச் செயலாளரான திரு. செல்லச்சாமி கூறிய கருத்து அவர்களின் நிலைப்பாட்டை நிரூபிக்கின்றது. ''தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய ரூபா 70 சம்பள உயர்வுக்கு அவசியம் ஏற்பட்டால் முன்னறிவித்தல் கொடுத்து இ.தொ.கா. போராடத் தயங்கமாட்டாது'' என்று கூறியுள்ளார். அவரது கருத்துப்படி எழுபது ரூபா சம்பள உயர்வு தோட்டத் தொழிலாளர்களுக்கு அவசியம் இல்லை. அவர் மேலும் கூறுகையில் முன்பு திரு. டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்தை தாங்கள் ஆதரித்து அவசரகாலச் சட்டத்தை பிரகடனம் செய்து அதன் மூலம் 30 சதம் சம்பள உயர்வு பெற்றுக் கொடுத்த ''வீர வரலாற்றையும்'' ஞாபகப்படுத்தியது வேடிக்கையாகவே உள்ளது. இன்றைய அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கு பல எண்ணற்ற உரிமைகளை வழங்கி உள்ளது என்றும் கூறிய திரு. செல்லச்சாமி அதில் உருப்படியான ஒன்றைக் கூற முடியாது, இந்தியா செல்வோருக்கு இந்தியப் பணம் ரூபா 50 யிரயாணச் செலவாகப் பெற்றுக் கொடுத்த பரிதாபக் கதையை கூறியது சிரிப்பையே தருகிறது. மாதச் சம்பளம், சமசம்பளம், சம்பள உயர்வு, பிரசாவுரிமையில்லுழல்லும் - பாகுபாடும், நிலப்பிரச்சினை போன்ற அடிப்படைப் பிரச்சினைகளில் தோட்டத் தொழிலாளர்கள் கடந்த நான்கு ஆண்டு யூ. என். பி. ஆட்சியின் கீழ் எவற்றைப் பெற்றுக் கொண்டார்கள்; அல்லது இ.தொ.கா. வோ அன்றி தொண்டமானே செல்லச்சாமியோ பெற்றுக் கொடுத்தார்களா என்பதையே தோட்டத் தொழிலாளர்கள் திரு. செல்லச்சாமியிடம் திருப்பி கேட்கின்றனர். திரு. செல்லச்சாமிக்கும் அவரைப் போன்ற இ.தொ.கா. பிரமுகர்களுக்கும் இன்றைய வாழ்க்கைச் செலவை சமாளிக்க மட்டுமன்றி மேல் மிச்சமாகவும் செலவு செய்ய கைநிறைய சம்பளங்களும் கிம்பளங்களும் உண்டு. ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் நிலை தான் மிகமோசமாகவுள்ளது. அதற்காகவே ஏனைய தொழிற் சங்கங்கள் மூலமும், பொது ஸ்தாபனங்களின் மூலமும், ரூபா 70 சம்பள உயர்வை தோட்டத் தொழிலாளர்கள் வற்புறுத்தின்றனர்.

## சீனக் கட்சிக்கு வாழ்த்து

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அறுபதாவது ஆண்டு நிறைவை யொட்டி சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தேசிய அமைப்புக் கமிட்டி தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்தது. தேசிய அமைப்புக் கமிட்டியின் செயலாளர் தோழர் கே.ஏ. சுப்பிரமணியம் மேற்படி வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்தார்.

# அடுத்ததேர்தலுக்கு ஒரு ஒத்திக்கை

எதிர்காலத்தில் நமது நாட்டின் தேர்தல்கள் எவ்வாறு நடாத்தப்படும் என்பதை நாம் முன் கூட்டியே எழுதியிருந்தோம். தனிக் கட்சிப் பாசிச சர்வாதிகாரம் அரசோச்சும் தென் கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் நடைபெறும் மோசமான தேர்தல் நடைமுறைகளையும் சுட்டிக் காட்டியிருந்தோம். அடுத்துவரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் எவ்வாறு யூ. என். பி. தனது பாசிச சர்வாதிகார நடைமுறைகளை நடைமுறைப்படுத்தவுள்ளது என்பதற்கு ஒரு ஒத்திகையை மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்களில் நடாத்தியுள்ளது. குறிப்பாக யாழ்- மாவட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

# கருத்தும் கண்ணோட்டமும்

ஜனமகன்

# வாக்குரிமை கிடைத்து 50 ஆண்டுகள் வாக்களித்தமக்களின் நிலை...?

இலங்கையில் சர்வஜன வாக்குரிமை நடைமுறைக்கு வந்த ஐம்பதாவது வருட நிறைவை அரசாங்கம் தடல்புடலாகக் கொண்டாடுவது பற்றியும், பண நெருக்கடியின் மத்தியில் படாடோபமான கொண்டாட்டங்களும் விருந்துபசாரங்களும் எவ்வளவு துரோகமானவை என்பது பற்றியும் முன்னர் இப்பகுதியில் எழுதியிருக்கிறோம். ஜனநாயக வளர்ச்சியிலே வாக்குரிமை ஒரு குறிப்பிட்ட கட்டத்தை வகிக்கிறது என்பதை எவரும் மறுக்கமாட்டார். ஆயினும் சர்வஜனவாக்குரிமை முதலாளித்துவ ஜனநாயக அமைப்பிற்குள்ளேயே கிடைக்கப்பெற்றது நினைந்து கொள்ள வேண்டியது. பாராளுமன்ற ஆட்சி, கட்சிகளின் செல்வாக்கு, இருகட்சியின் அத்தியாவசியம் முதலிய பிரித்தானிய பாராளுமன்றவாதக் கருத்துக்கள் இந்நாட்டிலும் பரவியபொழுது அதனைப் பயன்படுத்தி முதலாளித்துவ கட்சிகள், தேசியம், இனம், மொழி, மதம் முதலியவற்றைப் பகடைக்காய்களாக உருட்டி அரசியல் சொக்கட்டான் ஆடக் கற்றுக்கொண்டன.

அவ்வப்போது மக்கள் மத்தியிலே எழும் முக்கிய பிரச்சினைகளுக்கு ஏதோ ஒரு வகையில் தீர்வு காணலாம், தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையில் காலத்துக்கு காலம் தேர்தல்களில் பங்குபற்றி பொதுசனங்கள் ஒரு கட்சிக்கு பெரும்பான்மை பலத்தை வழங்குவதுண்டு. ஆயினும் பிரச்சினைகள் தீருவதில்லை. கட்சிகளின் இடம் மாறும் விளையாட்டுக்கள்தான் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. இந்த பாராளுமன்ற மாயையை மேலும் கவர்ச்சியாக்குவதற்கும், அதில் அமிழ்ந்திருப்போருக்கு வாழ்க்கை வசதிகளை மேலும் மேலும் அதிகரித்துக்கொள்வதற்கும், கட்சி வேறுபாடுகளின்றி அனைத்துப் பாராளுமன்றவாதிகளும் ஆதரவு வழங்கி தமது சுகநலன்களைப் பாதுகாத்துக்கொள்வதையும் நாம் பல காலமாகப் பார்த்து வந்திருக்கிறோம்.

இந்த முதலாளித்துவ பாராளுமன்ற வாதத்தின் வளர்ச்சியுற்ற நிலையையே இந்த அரசாங்கத்தின் செயல்களில் நாம் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். சம்பளங்களையும் அலவன்சுகளையும், போக்குவரத்து வசதிகளையும் உயர்த்துவதன் மூலம், பொதுவாக யாவரையும் கட்சி வேறுபாடின்றி பாராளுமன்றத்துக்கு விசுவாசமுள்ளோராக வைத்திருப்பதே ஜே. ஆரின் தந்திரோபாயமாக உள்ளது. இந்த நாட்டின் பாராளுமன்ற வரலாற்றிலே முன்னெப்பொழுதும் இருந்திராத எண்ணிக்கை கொண்ட அமைச்சர்களையும் மாவட்ட அமைச்சர்களையும் உதவி அமைச்சர்களையும் நியமித்திருப்பதால் யாவரையும் தமது பதவிகளுக்கும் அவற்றை அளித்த தனக்கும் விசுவாசமுள்ளவர்களாக கைக்குள் வைத்திருப்பது ஜனாதிபதியின் மதியூகச் செயல்முறையாகக் காணப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவருக்கு வசதிகளையும் சலுகைகளையும் பாராளுமன்ற வாதத்தின் பெயரில் வழங்குவதன்மூலம் அவரை ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வைத்து கொள்ளவும் ஜனாதிபதியால் முடிகிறது. எந்த ஒரு நெருக்கடிக்குள்ளும் எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்திப்பது என்ற மாய்மாலத்தினால் அவர்களுக்கு மானசீகமான ஒரு கட்டுப்பாட்டு உணர்வை வளர்த்து வந்திருக்கிறார். இவையெல்லாம் இன்று சாதாரண மக்களும் நன்கு கண்டறிந்த செய்திகள்! உண்மைகள்.

யப்பானிய இளவரசு தம்பதிகள் விஜயம் செய்தல், பிரித்தானிய மகாராணியார் விஜயம் செய்தல், பொதுநல அமைப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வரவழைக்கப்படுதல், சர்வஜன வாக்குரிமையின் சாதகமான விளைவுகள் குறித்த நாட்டிற்குள்ளும், வெளிநாடுகளிலும் பிரமாண்டமான பிரசாரம் செய்யப்படுதல் என்பன வங்குரோத்து அடைந்துவரும் போலி ஜனநாயகத்தை - பாராளுமன்ற ஜனநாயகத்தை மினுக்கிச் சோடித்துக் காட்டுவதாகவே இருக்கமுடியும்.

அரசின் விளம்பரப்படுத்தப்பட்ட ''பாரிய'' ''துரித'' ''சுதந்திர வர்த்தக'' திட்டங்கள் புஸ்வாணங்களாய்ப் புகைந்த நிலையில், பௌத்த சமய சம்பந்தமான வைபவங்களினாலும், ''கிராம எழுச்சி'' என்ற கொந்துராத்துக்காரர் எழுச்சி விழாக்களினாலும், யாவற்றுக்கும் மேலாக பச்சையான இனவாதத்தைத் தூண்டிவிடும் கூட்டங்களினாலும் மக்களின் கவனத்தைத் திசை திருப்பிவிட ஜெயவர்த்தனா ஆட்சி பெரும்பாடு படுகிறது. சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் சிங்களவர் என்றமுறையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும் என்று ஜனாதிபதி மாவட்டசபைத் தேர்தலையொட்டிய கூட்டங்களில் பேசியது அக்கட்சி அப்பழுக்கற்ற சிங்கள இனவாதக் கட்சி என்பதை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. எனினும் அண்மைக்காலச் சம்பவங்கள் ஒரு செய்தியை நிரூபித்துவிட்டன. சுத்த சுயம்புவான இனவாதியாக இருந்துவந்துள்ள ஜே. ஆர். தனது விஷக் கருத்துக்கள் எல்லாவற்றையும் சிங்களப் பகுதிகளில் கூட்டம் கூட்டமாக எடுத்துக்கூறியும் பெரும்பான்மை சிங்கள மக்கள் அவற்றுக்கு செவிசாய்க்கவில்லை. யாழ்ப்பாணத்தில் நடந்த பயங்கரவாதம் அரசும், ஆளும் கட்சியும் கைகோத்துக் கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாதமே அல்லாது சிங்கள மக்கள் நடாத்திய கொடுமைகள் அல்ல என்பது பலருக்கும் தெளிவாகியுள்ளது. யாழ்ப்பாணத்தில் நடந்தவை தமிழ்மக்களுக்கு எதிரான வன்செயல்களாக இருந்த அதேவேளையில் சிங்

## வாக்கைப் பெற்றவர் சுகபோகம் கண்டனர் வாக்கை இட்டவர் வாழ்க்கையை இழந்தனர்

கள வெகுஜனங்களுக்கு எதிராக சமீப காலத்தில் யூ. என். பி. இழைத்து வந்திருக்கும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளின் ஓர் அம்சமே என்பதை நாட்டுமக்கள் அறிவுபூர்வமாக உணரத்துவங்கியிருப்பதே இவ்விழிப்புணர்விற்குக் காரணமாகும். நல்லெண்ணம் படைத்த பல சிங்கள பிரமுகர்களும், சமூக சேவையாளரும், கல்விமான்களும், சமூகங்களுக்கிடையே சமநீதிக்காகப் பாடுபடும் நலன்விரும்பிகளும் பிறரும் கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணம் வந்தபோதெல்லாம் இதனை வலியுறுத்தினர். உரிமைப் போராட்டங்களையும், மாணவர் இயக்கங்களையும், தொழிற்சங்க நடவடிக்கைகளையும் - சுருங்கச் சொன்னால் சகலவிதமான நீதிக்கான உரிமைக்குரல்களையும் குண்டர்களைக் கொண்டும், அரசு யந்திரத்தைக் கொண்டும் அடக்கி ஒடுக்கும் அரசின் போக்கு ஏற்கனவே தென்னிலங்கையில் மக்களால் நன்கு அறியப்பட்டது. அதன் மற்றொரு வடிவத்தையே யாழ்ப்பாணத்தில் காண முடிந்தது என்று பல தென்னிலங்கைப் பிரமுகர்கள் குறிப்பிட்டது கவனத்தை ஈர்த்தது.

தீவிரவாதப் போக்குள்ள சமயப் பிரமுகர் ஒருவர் கச்சிதமாகக் கூறியது போல, ''இங்கு நடைமுறைப்படுத்தப்படுவது பாராளுமன்ற ஜனநாயகத்தின் நிழல்கூட அல்ல; கலப்பற்ற பாராளுமன்ற சர்வாதிகாரமே நிலவுகிறது'' பிலிப்பைன்ஸ், தென்கொரியா, இந்தோனீஷியா முதலிய பலநாடுகளிலும் பாராளுமன்றம் இருக்கிறது. தேர்தல்களும் நடாத்தப்படுகின்றன. தேர்தல்களில் அரசுக்குப் பெரும்பான்மை வாக்குகளும் கிடைத்து விடுகின்றன. ஆனால் அங்கு மக்கள் அநுபவிப்பது சர்வாதிகாரம் என்பதை உலகம் அறியும். இங்கு அந்தகைய நிலைமையே உருவாகிக்கொண்டிருக்கிறது. இதனால் தான் இப்பொழுது நாட்டிலுள்ள ஜனநாயக - தேசபக்த-சக்திகள் யூ. என். பிக்கு எதிரான முன்னணியே அத்தியாவசியம் என்பதை வேகமாக உணர்ந்து வருகின்றன.

★

# தமிழர் கூட்டணியின் அடுத்த வேலை என்ன?

## பேரப் பேச்சா? அன்றி உரிமைப் போரா?

மாவட்ட சபைத் தேர்தல் நடந்துமுடிந்தது. யூ. என். பியும் தமிழர் வியாபாரக் கூட்டணியும் பங்காளிகளாக விளங்குகிற சூழ்நிலையில், கூட்டணி தனது வழமையான இரட்டை வேடத்தையே தொடர்ந்தும் ஆடும் போலத் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் நடந்த பயங்கர சம்பவங்களின் எதிரொலி மறையுமுன்னரே தளபதி உலகப் பயணத்தை மேற்கொண்டார். ஜனாதிபதியின் முழுச் சம்மதத்துடனேயே இது நடைபெற்றிருக்க வேண்டும் என்பது விஷயமறிந்த அரசியல் அவதானிகளின் ஹேஷ்யமாகும். விஷயங்களை ஆறப்போட்டு, மக்கள் சூடான செய்திகளை மறக்கும்படி செய்வதே இதன் உடனடி நோக்கமாகும். அத்துடன் திரைப்பட பாணியில் 'சஸ்பென்ஸ்'' கூட்டி வைத்திருப்பது போல, தலைவர் வந்திடுவார் என்ற மனோபாவமும் கட்டி வளர்க்கப்படுகிறது. அமிரின் வெளிநாட்டு விஜயத்தில் குறிப்பிடத்தக்கது எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. வழமையான பிரசார பயணந்தவிர, வேறேதுவும் இல்லை. போனமச்சான் திரும்பி வருவார். அவ்வளவுதான். கருணாநிதியோடு நின்று எடுத்துக் கொண்ட புகைப்படம் மிச்சம்.

ஆனால் கொழும்பில் நடப்பது என்ன? கூட்டணியின் சட்ட மேதைகளாகவும், அரசியல் யாப்பு விற்பன்னர்களாகவும் புகழப்படும் கலாநிதி நீலன் திருச்செல்வமும், தந்தையின் மருகரான கலாநிதி ஜெயரத்தினம் வில்ஸனும் யூ. என். பி. பிரமுகர்களுடன் மாவட்ட சபைகளைச் செயற்படுத்துவதற்கான விதிகளையும் உபவிதிகளையும் தயாரிக்க முற்பட்டிருக்கின்றனராம். ஜே. ஆரின் கெட்டித்தனம் கொஞ்சம் பாராட்டக் கூடியதுதான். கூட்டணியினதும், யூ. என். பி. யினதும் நம்பிக்கைக்கு ஏககாலத்தில் உரிமையாளராயுள்ள இரு தமிழ் (தெரியாத) பிரமுகர்களை மாவட்டசபைச் சட்டதிட்டங்களுடன் தொடர்புபடுத்தியிருப்பது சாதுரியமான தந்திரோபாயம்தான். உண்மையில் வில்சன் எந்தவிதத்திலும் இன்றைய இலங்கைத் தமிழர் பற்றி பேச அருகதை அற்றவர். பரதேசி எப்படி நம்மவர்க்கு உபதேசிக்க உரிமையுண்டு? இருபெரும் தமிழரசுத் தலைவர்களின் மகனும், மருமகனும ஜே. ஆருக்கு ஆலோசகராக இருப்பதும், கூட்டணிப் பிரமுகர்களாக இருப்பதும் தமிழ்ச்சமுதாயத்திலே தான் நடக்கக்கூடியது! அதிலும் தமிழர் வியாபாரக் கூட்டணி அரசியல் நடத்தும் அரங்கிலேதான் நடக்கக் கூடியது.

## யூ. என். பி. மெத்தையில் நீலனும் வில்சனும்!

இன்று கூட்டணியை எதிர்நோக்கும் தருக்கரீதியான கேள்வி இதுதான்; ஜனநாயக விரோதம், பாசிஸம், இன ஒதுக்கல், ஏகாதிபத்திய வழிபாடு, மோசமான மதவெறி இவை போன்றவற்றை கூச்சம் இல்லாமல் கடைப்பிடிக்கும் அரசாங்கத்தை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? ஆசனங்களைப் பாதுகாப்பதா? அரசியல் உரிமைகளுக்காகப் போராட முனைவதா? நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பரிணமித்து யூ.என்.பி. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுடன் சேர்ந்து நிற்பதா அல்லது தமிழரை மேலும் தனிமைப்படுத்தி தமது பதவிகளைக் காப்பாற்றுவதையே பிரதான நோக்கமாய்க் கொண்டிருப்பதா? வீராவே

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இனவாத இழிநிலை என்று மாறும்

## பாராளுமன்றம் பரிகாரமாகாது

## வர்க்க அரசியல் முன்னெடுக்கப்பட வேண்டும்

பல வருடங்களுக்கு ஒரு முறை, பின்பு சில வருடங்களுக்கு ஒரு முறை, அண்மைக் காலங்களில் ஒரிரு வருடங்களுக்கு ஒருமுறை, எதிர் காலத்தில் வருடா வருடம் அல்லது மாதா மாதம் நடைபெறலாம். ஆம் அது தான் இனக்கலவரம் - இனவாத வன்முறைச் சம்பவங்கள் கொலை, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு, மக்கள் மத்தியில் பயப்பீதி. இனக்கலவரங்களால், இனவாத வன்செயல்களால் இதுவரை மிகக் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ்மக்கள். தென் பகுதிகளில் இனக் கலவரம் வெடித்தால் தமிழ் மக்கள் பாதுகாப்புத் தேடி கப்பல் ஏறுவது தமது சொந்தப் பிரதேசங்களான வட, கிழக்கு மாகாணங்களுக்கு. ஆனால் இன்றோ தமிழ் மக்களின் சொந்தப் பிரதேசமான யாழ்ப்பாணத்திலே இனவாத வன்செயல்கள் தனது கோரத்தனத்தைக் காட்டி விட்டன. தமது பாதுகாப்பிற்கு ஒரே உத்தரவாதம் என்று நம்பிய பிரதேசத்தின் தலை நகரான யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் பயப்பீதியுடன் வெளியேறி கிராமங்களுக்கு செல்லும் நிலை ஏற்பட்டது. கிராமங்களுக்குள்ளும் இனவாத வன்செயல் புகுந்தால் மக்கள் எங்கே செல்வது? இங்கே தான் தாக்கமான பல கேள்விகள் தமிழ் மக்கள் முன் தலைகாட்டி நிற்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் தான் தமிழ் மக்கள் எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகள் பற்றியும், நமது நாட்டின் அரசியல் பொருளாதாரத் தன்மைகள் எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகள் பற்றியும் நிதானமான ஆழமான சரியான அரசியல் கொள்கைகள் பற்றி சிந்திப்பது அவசியம்.

இனக் கலவரங்களினதும் இனவாத வன் செயல்களினதும் ஊற்று மூலம் சொத்துடைய வர்க்க நலன் காக்கும் இன்றைய சமூக அமைப்பு என்பது புரிந்து கொள்ளப்படல் வேண்டும். பிரித்தானிய எஜமானர்களிடம் இருந்து சிங்கள சொத்துடைய வர்க்கம் ஆளும் அதிகாரத்தைக் கைமாற்றிக் கொண்டது. இதற்கு தமிழ் சொத்துடைய வர்க்கம் ஆதரவும் அளித்தது. ஆனால் கையேற்றுக் கொண்ட அதிகாரத்தை வைத்து சிங்கள ஆளும் வர்க்கம் சொத்துடைய சிங்கள தமிழ் முஸ்லீம் வர்க்கத்தினருக்கே சேவை செய்தது. சிங்கள ஆளும் வர்க்க அதிகாரத்தின் கீழ் லாபமடைந்தவர்கள் சிங்கள தமிழ் முஸ்லீம் சொத்துடையோரே யாவர். அதேவேளை தமது அன்றாட வாழ்வில் எண்ணற்ற வாழ்க்கைச் சுமைகளை ஏற்று அதள பாதாளத்திற்குத் தள்ளப்பட்டவர்கள் சாதாரண உழைக்கும் சிங்கள தமிழ் முஸ்லீம் மக்களாவார். இத்தகைய உழைக்கும் மக்களின் வளர்ந்து வரும் எதிர்ப்புகளை திசை திருப்புவதற்கு வர்க்க ஐக்கியத்தைச் சிதறடிப்பதற்கு மக்களின் கவனத்தை இனவாத வழிகளில் திருப்புவதற்கு இலங்கையின் முதலாளித்துவப் பாராளுமன்ற அரசியல் அரங்கில் இனவாதம் ஒரு பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டது. பாராளுமன்றத்தில் அதிகார பீடம் ஏறுவதற்கு மட்டும் அன்றி, பெற்ற அதிகாரத்தை இறுக்கி வைத்திருப்பதற்கும் இனவாதம் ஒரு சக்தி வாய்ந்த கருவியாகச் சிங்கள ஆளும் வர்க்கத்தால் பாவிக்கப்பட்டு வந்தது. இன்றும் அது தொடருகின்றது. இந்த நிலை இன்றைய சமூக பொருளாதார அரசியல் அமைப்பு முறை தகர்க்கப்படாத வரை நீடிக்கவே செய்யும். ஆளும் வர்க்கம் இறுதி வரை தனது சக்தி வாய்ந்த இனவாத ஆயுதத்தைப் பாவிப்பதை நிறுத்திக் கொள்ளப் போவதில்லை.

இந்த உண்மையை நமது நாட்டின் உழைக்கும் வர்க்கம் உணர்ந்து கொள்ளாதவரை குறிப்பாகத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளாதவரை இனவாதத்திற்கும், இனவாத வன்செயல்களுக்கும் எதிரான மாற்றுவழி கண்டு கொள்ள முடியாது. தமிழ் மக்களுக்கு எதிரான சிங்கள ஆளும் வர்க்கத்தின் இன அடக்கு முறைகளையும் அவற்றின் உச்ச கட்டமான இனக் கலவர-இனவாத வன்செயல்களையும் வைத்து தமது சொந்த வர்க்க நலன் பேணும் அரசியல் பாதையிலேயே தமிழ்த் தலைவர்கள் நடந்து வந்துள்ளார்கள். மேலும் பல்லாண்டு அதே பாதையில் செல்வதற்கு வழி அமைத்துள்ளார்கள். அவர்களது பாதைக்கு தமிழ் மக்களின் - தமிழ் இளைஞர்களின் இரத்தமும், வியர்வை உயிர் உடமைகள் எல்லாம் பலியாக்கப்பட்டுள்ளன. தலைவர்கள் ஏமாற்று வித்தையில் தமது வித்துவத்தை கச்சிதமாகச் செய்து வருகின்றனர். தமிழ் மக்களோ ஏமாற்றப் பட்டவர்களாகவே உள்ளனர்.

தமிழ் மக்களுக்கு இன்று முதன்மையாகத் தேவைப் படுவது என்ன? அது தான் தமது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளக் கூடிய சரியான அரசியல் கொள்கையாகும். நமது நாட்டின் பொருளாதார, அரசியல், கலாச்சார, புவியியல் தன்மைகளின் விசேஷ இயல்புகளையும், கடந்த கால வரலாற்று உண்மைகளையும் முழுமையாக கணக்கில் கொண்டு எதிர்காலத்தில் ஒரு சுபீட்சமான பாதைக்கு தமிழ் மக்களை மட்டுமன்றி ஏனைய மக்களையும் இட்டுச் செல்லக் கூடிய ஒரு நிதானமான அரசியல் மார்க்கமே இன்று தமிழ்மக்கள் முன் தேவைப் படுகின்றது.

சம்பவங்களின்போது வெறும் உணர்ச்சி வசப் படுவதால் சரியான மார்க்கம் ஒன்றை உருவாக்கி விட முடியாது. இவ்வாறான வெறும் உணர்ச்சிகள் சொற்ப நேரத்திற்கு மட்டுமேநிற்கக் கூடியவை. அண்மைய வன்முறைச் சம்பவங்களால் வெறும் உணர்ச்சி வசப்பட்டவர்களுக்கு அமிர்தலிங்கம் அவர்களின் பாராளுமன்றப் பேச்சுடன் யாவும் அடங்கி விட்டது. அவர் அமெரிக்காவுக்கும் இங்கிலாந்திற்கும் சென்றதுடன் மேலும் அவ் உணர்ச்சிகள் அமைதி கண்டு விட்டன. ஆனால் அண்மைய சம்பவங்கள் உண்மையான விடுதலை விரும்பும் எண்ணற்ற இளம் நெஞ்சங்களில் ஆழமான வடுக்களை ஏற்படுத்தி விட்டன. ஆனால் அவர்கள் ஒரு நிதானமான அரசியல் மார்க்கத்தைத் அடைய விரும்புகிறார்கள். அத்தகைய சரியான அரசியல் மார்க்கம் வர்க்க ரீதியிலானதும், மார்க்சிசம் லெனினிசம் மாசேதுங் சிந்தனை வழியிலானதுமாகவே இருக்க முடியும். இத்தகைய அரசியல் மார்க்கத்தினால் தான் தமிழ் மக்கள் நாட்டின் சகல இனத்தையும் சேர்ந்த உழைக்கும் மக்களின் ஆதரவோடு இனவாத வன்செயல்களை முறியடிக்கும் மக்களின் போராட்டத்தைப் படிப்படியாக முன்னெடுக்க முடியும். மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித்தனமான வன்செயல்களின் இருந்து மக்களைப் பாதுகாக்க ஒரே வழி மக்கள் போராட்டப் பாதையில் தீரமுடன் அணிவகுப்பதேயாகும்.

இதைவிடுத்து அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் முழங்குவதாலோ, கருணாநிதி அறிக்கை விடுவதாலோ, எம். ஜி. ஆர் கடிதம் அனுப்புவதாலோ அன்றி இந்திரா காந்தி படை அனுப்புவார் என்றோ யாராவது நம்பினால் தமிழ் மக்கள் அடிமைத் தனமாக வாழ்வதற்கு மட்டுமே தகுதி உடையவர்களாக இருக்க வேண்டியே ஏற்படும். அல்லது சோவியத் யூனியன் படை அனுப்பும் என்று எதிர்பார்ப்பதோ அடிமைத்தனத்தின் உச்ச கட்டமாகவே அமையும்.

தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களை தமது பாராளுமன்ற ஆசனங்களின் வெற்றிகளுக்கு அளவாக மட்டுமே பாவித்து வந்துள்ளனர். தீரமுடன் மக்கள் போராட்டங்களை சரியான கொள்கைகளின் அடிப்படையில் முன் எடுப்பதற்கு தமிழ் மக்களை தமிழ்த் தலைவர்கள் வழிநடத்தவில்லை. காரணம் அவர்கள் சொத்துடைய வர்க்க நலன் பேணும் ஆண்ட பரம்பரையினர் என்பதே உண்மை. ஒருநாள் உண்ணாவிரதம், கைகளை ஒற்றைக் கதவில் வைத்திருப்பது, கூட்டங்களில் முழங்குவது, எல்லாவற்றுக்கும் மேலாக நாம் பாராளுமன்ற முனையில் போராடுவோம் என்று மக்களை ஏமாற்றுவது. தமிழ்த் தலைவர்களின் இந்த ஏமாற்று வழிகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு தமிழ் மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளில் இருந்து சரியான அரசியல் மார்க்கத்தை நோக்கி முன்னேறுவது மட்டுமே சரியான பாதையாக இருக்க முடியும். இல்லாவிடில் மீண்டும் இருளில் தடுமாறி, ஏமாற்றுபவர்களின் கைகளில் சிக்கி மேலும்பல இனவாத வன்செயல்களை அனுபவிக்க வேண்டியே ஏற்படும்.

# பயங்கரவாதம்!

உலக நாடுகள் பலவற்றிலே நமது நாடு உட்பட பயங்கரவாதம் என்ற பேச்சு மேலோங்கி வருவதைக் காண முடியும். இவ்வாறு பரபரப்பான முறையில் பயங்கரவாதத்தைப் பற்றிப் பேசுவோர் ஒருபக்க சார்பாக மட்டுமே தமது பிரசுரத்தை மேற்கொண்டு வருகின்றனர். மாக்சிச-லெனினிச-மாசேதுங் சிந்தனை வாதிகளாகிய நாம் இது பற்றி சரியான மதிப்பீடு ஒன்றை கொண்டிருப்பது அவசியமாகும்.

உலகில் இன்று இரண்டு வகையான பயங்கரவாதம் நிலவி வருகின்றது. முதலாவது ஏகாதிபத்திய வாதிகளாலும் அவர்களது அடிவருடும் அவ்வவ் நாட்டு முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களினாலும் கட்டவிழ்த்து விடப்படும் பயங்கரவாதம். விடுதலை வேண்டி நிற்கும் மக்களுக்கு எதிராகவும், சகல விதமான ஒடுக்கு முறைகளுக்கு எதிராக நீதி நியாயம் கோரி போராடுகின்ற மக்களுக்கு எதிராகவும் இப் பயங்கரவாதம் ஈவிரக்கமற்ற முறையில் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. பிரித்தானிய, பிரஞ்சு, ஜேர்மன் ஏகாதிபத்தியவாதிகள், அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், அவர்களின் ஆதரவு பெற்ற இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள், தென் ஆபிரிக்க நிற வெறியர்கள் இதுவரை உலக மக்களுக்கு எதிராக பல்லாயிரக் கணக்கான பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு மக்களையும் அவர்களது நாடுகளை, செல்வங்களை கொலை செய்து கொள்ளையிட்டு, தீ வைத்து நாசம் செய்து வந்துள்ளனர். இன்றும் அத்தகைய பயங்கரவாதச் செயல்களை உலக மக்களுக்கு எதிராக முடுக்கி விட்டவண்ணமும் இருக்கின்றனர். இந்த வழியில் புதிய ஏகாதிபத்தியமாக உருவெடுத்துள்ள சோவியத்யூனியனும் தனது பயங்கரவாதத்தை ஆப்கானிஸ்தானில், கம்பூச்சியாவில், எரித்திரியாவில் மற்றும் பல நாடுகளில் கட்டவிழ்த்து விட்டு வருவதை நாம் கண் முன்னே காண்கின்றோம். இதேபோல் ஒவ்வொரு நாடுகளின் முதலாளித்துவ ஆளும் வர்க்கங்கள் தத்தமது சொந்த மக்களின் மீது, வர்க்க ரீதியிலும், இனரீதியிலும் நசுக்கி வைத்திருப்பதற்காக தனது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விடுகின்றன. இத்தகைய ஆளும் வர்க்கப் பயங்கரவாதம் திட்டமிட்ட முறையிலும், ஒழுங்கு படுத்தப்பட்ட ''சட்டதிட்டங்களின்'' அடிப்படையிலும் மக்களின் மீது தனது கோரத்தனத்தை காட்டி வருவதைக் காணமுடியும்.

இரண்டாவது, ஆளப்படும் மக்கள் மத்தியில் இருந்து உருவாகும் தனிநபர்களினதும், குழுக்களினதும் பய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொழிற்சங்கப் பிரச்சினைகளை வர்க்கக் கோணத்திலேயே அணுகவேண்டும்!

## மடுல்சீமைக் கூட்டத்தில் தோழர் கரவிட்ட பேச்சு

ஒரு தொழிற்சங்கம் ஒரு அரசியல் கட்சியல்லவென்றாலும் அரசியலிலிருந்து விடுபட்டநிலையில் ஒரு தொழிற்சங்கம் இருக்கமுடியாது என்பது உண்மைநிலையாகும். ஒரு தொழிற்சங்கமானது அரசியலைத் தலைமைப் பதவியாக ஏற்றுக்கொள்ளாவிட்டால் அது தொழிலாளவர்க்கத்திற்கு உண்மையாகவும், தாக்கமாகவும் சேவை செய்ய முடியாது என இ. தோ. தொ. ச. காரியாலயமொன்றை மடுல்சீமையில் திறந்து வைத்து உரையாற்றிய உழைக்கும் மக்கள்கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் எச். எல். கே. கரவிட்ட குறிப்பிட்டார்.

தாங்கள் அரசியலில் ஈடுபடவில்லையென்று பிரகடனம் செய்யும் தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரும் உண்மையில் முதலாளித்துவ அரசியலிலே ஈடுபட்டுள்ளார்கள். அரசியல் சார்பற்ற தொழிற்சங்கமென்ற சுலோகத்தை முன்வைப்பதன் ஒரேயொரு நோக்கம் தொழிற்சங்கங்களை தொழிலாளவர்க்க அரசியலிலிருந்து பிரித்து எடுத்து முதலாளிகளின் நலன்களுக்கு சேவைசெய்ய வைப்பதேயாகும்.

ஒரு தொழிற்சங்கம் ஓர் அரசியல் அமைப்பு அல்ல. அவை அரசியல் அமைப்பாக இருக்கும்பட்சத்தில் அரசியல் கட்சிகள் இருக்கவேண்டிய அவசியமில்லை. தொழிற்சங்கமொன்றில் அங்கத்தவனாயிருப்பது அந்த நபருக்கு அரசியல் கட்சியொன்றில் அங்கத்துவத்தை ஏற்புடையதாக்காது. உண்மையில் வெவ்வேறு அரசியல் அமைப்புகளில் அங்கத்தவராய் இருக்கும் தொழிலாளர்கள் ஒரே தொழிற்சங்கத்திலிருக்கலாம். ஏனெனில் ஒரு தொழிற்சங்கமானது அதன் அங்கத்தவர்களின் அன்றாட பிரச்சினைகளைக் கவனிப்பதிலும், அவர்களின் சேவை நிபந்தனைகளை விருத்திசெய்வதிலும், அவர்களின் உடனடிக் கோரிக்கைகளை வென்றெடுப்பதிலுமே கவனம்செலுத்தும்.

ஒரு தொழிற்சங்கம் அதன் அங்கத்தவர்களுக்கு நன்றாகச் சேவைசெய்ய வேண்டுமானால் அது நிச்சயமாக ஒரு வர்க்க நிலைப்பாட்டை எடுத்தேயாக வேண்டும். எவ்வாறாயினும் வர்க்க அடக்குமுறைக்கு உட்படாத டாக்டர்கள், துரைமார்கள் அல்லது நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான தொழிற்சங்கங்களுக்கு இவை பொருத்தமாக இருக்கலாம். ஆனால் உழைக்கும் வெகுஜனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக்கொண்ட தொழிற்சங்கத்தைத்பொறுத்தவரை நிலைமை வேறு.

வர்க்கங்கள், வர்க்கமுரண்பாடுகள், வர்க்க அடக்குமுறை இருக்கிறதென்பதை நாம் ஏற்றுக்கொண்டால் தொழிற்சங்கப் பிரச்சினைகளை ஒரு வர்க்க கோணத்திலேயே அணுக வேண்டும். வர்க்கப்போராட்டம் என்ற கோட்பாட்டை நாம் நிராகரித்தால் ஒருவேலை கொள்வோருக்குக்கீழ் வேலை செய்யும் தோட்டத் துரைமாரையும் எங்கள் சங்கத்தில் அங்கத்தவராக வைத்திருக்கலாமல்லவா?

தோட்டத் தொழிலாளர்களைக் கோரமாகச் சுரண்டி முதலாளித்துவ அரசிற்கு விசுவாசமாகச் சேவைசெய்வதற்காகத் துரைமார்களுக்குக் கொழுத்த சம்பளம், பல்வேறு வசதிகளும் செய்துகொடுக்கப் படுகிறது.

எமது சங்கத்தின் நீண்டகால சரித்திரத்தில் தொழிலாளவர்க்க நலன்களைச் சமரசம்செய்து முதலாளித்துவ சு. க. அரசாங்கத்திலோ, சு. க., சமசமாஜ, க. க. ஐக்கியமுன்னணி அரசாங்கத்திலோ. அல்லது யூ. என். பி. அரசாங்கத்திலோ சலுகைகளையோ அல்லது பதவிகளையோ பெறவில்லை. ஒரு சில பதவிகளுக்கோ தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளை பண்டமாற்றுச் செய்யாமல் இறுக்கமாக தொழிலாள வர்க்கநிலையைக் கடைப்பிடித்துவருகிறோம்.

நாம் தொடர்ந்தும் இந்தப் புனித நடைமுறையைக் கடைப்பிடித்து வருகிறோம்.

நாம் தொடர்ந்தும் இந்தப் புனித நடைமுறையைக் கடைப்பிடித்து வரல்வேண்டும். நாம் பாட்டாளிவர்க்க அரசியலை முதன்மைப்படுத்தி எந்தச் சக்தியுடனும் சந்தர்ப்பவாத கூட்டை ஏற்படுத்த மறுக்கும் தொழிலாளவர்க்கத்தின்பக்கம் நாம் நிற்கவேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமே, எமது சங்கம் இ. தொ. க, போன்ற ஒரு சங்கமல்ல என்பதைத் தொழிலாளவர்க்கத்திற்கு எடுத்துக் காட்டுவதுடன் எமது சங்கம் ஏனைய சங்கங்களிலிருந்து தரத்தில் வேறுபட்டது என்பதையும் நிரூபிக்கும். இதுவே ஏனைய சங்கங்களிலிருந்து எமது சங்கத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும்.

# மலையகச் செய்திகள்

## பெயரளவில் சம்பள உயர்வு நடைமுறையில் தட்டிப்பறிப்பு

நமது நாட்டில் சம்பள உயர்வு என்ற விஷயம் தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒரு எட்டாத கனியாகவே ஆக்கப்பட்டிருக்கின்றது. இதை ஆக்குபவர்கள் மாறி மாறி ஆட்சிக்கு வரும் ஆளும் வர்க்கத்தினரேயாவர். தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக ஒவ்வொரு அரசாங்கத்திலும் எவர் அங்கத்துவத்தைப் பெறுகிறாரோ அவர் வேறு எதைப்பற்றியும் பேசலாம். ஆனால் சம்பள உயர்வை மட்டும் பேசவும் கூடாது பெரிதுபடுத்தவும் கூடாது என்ற நிலையே தொடர்கிறது.

திரு. தொண்டமான் அவர்கள் பெரிய ஆரவாரத்துடன் யூ. என். பி. அரசுடன் சங்கமமாகி அமைச்சர் பதவி பெற்றதும் சம்பள உயர்வு முதன்மைப்படுத்தப்படும் என்றே தோட்டத் தொழிலாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஆனால் நாலு வருடம் முடிந்தும் அதைப் பற்றிய பேச்சே இல்லை. கடந்தவருடம் 70 ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு அது மேலே கட்டித் தொங்கவிடப்பட்ட தொன்றாகவே உள்ளது. இதைப்பற்றி இ. தொ. கா. வைக் கேட்டால் பழைய கதை பேசுகிறார்கள். 55 ரூபா 50 ரூபா சம்பள உயர்வு எங்களால்தானே வந்தது என்றார்கள். ஆனால் அதன் பரிதாபநிலை அவர்களுக்கே புரியும். 50 ரூபாவைப் பெற மாதத்தில் 20 நாட்களும், 55 ரூபாவைப்பெற மாதத்தில் 22 நாட்களும் வேலை செய்திருக்கவேண்டும் என்ற நியதி உண்டு. இதைப் பாவித்து அநேகமான நிர்வாகங்கள் வேலை நாட்களைக் குறைத்து 50, 55 ரூபா சம்பள உயர்வுகளைத் தட்டிப் பறித்துக் கொள்வதே நடைமுறையாக உள்ளது.

வாழ்க்கைச் செலவு உயர்கிறது, யூ. என். பி.யை அண்டிப் பிழைப்போருக்கு பதவிகள் பட்டங்கள் கிடைக்கின்றன. அவர்களது வாழ்க்கை வசதிகளும் உயருகின்றன. ஏன் தேயிலையின் விலைகூடச் சற்று உயர்ந்திருக்கின்றது. ஆனால் தேயிலை உற்பத்திக்குத் தங்களையே இரையாக்கிக்கொள்ளும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் என்பது உயரவில்லை.

இது ஏன் என்பதைத் தோட்டத் தொழிலாளர்கள் அரசியல் ரீதியில் சிந்திக்க வேண்டியது அவசியமாகும். முன்பு இந்தப் பிரச்சினையானது தொழிற் சங்கவாதிகளையும் அதன் தலைவர்களையும் சுற்றியே இருந்தது. ஆனால் அந்தச் சுற்றுவட்டத்திற்குள் இருந்து விடுபட்டு அரசியல் ரீதியாகவும், ஸ்தாபன ரீதியாகவும் தோட்டத் தொழிலாளர்களின் உயர்வுக்கான பாதையில் முன்னேறவேண்டிய நிர்ப்பந்தம் இன்று மலையகத்தில் உருவாகி உள்ளது. இது மிக நல்ல அம்சமேயாகும்.

## இனவாத இழிநிலை என்று...

3-ம் பக்கத்தொடர்...

கரவாதமாகும், ஆக்கிரமிப்பு, அடக்கு முறை, சுதந்திரத்தை மறுத்தல், விடுதலையை எதிர்த்தல் போன்ற ஏகாதிபத்திய முதலாளித்துவ ஆளும் வர்க்க நடைமுறைகளை எதிர்ப்பதற்கு அல்லது அவற்றில் இருந்து விடுதலை அடைவதற்கு இத்தகைய தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளை சிலர் ஒரு வழியாகக் கொள்கின்றனர். ஆனால் இந்த வழியால் ஒரு வர்க்கம் அல்லது இனம், அல்லது ஒரு நாடு விடுதலை பெற்றது என்று யாருமே கூறமுடியாது. இத்தகைய தனிநபர் பயங்கரவாதத்தை உண்மையான மாக்சிச வாதிகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இத்தகைய தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள் சிறில் நிறைந்ததாக இருந்த போதிலும் மக்களின் பரந்த போராட்டப் பாதைக்குப் பல இடையூறுகளை ஏற்படுத்தி பலவீனப்படுத்தி விடுகின்றது. ஆளும் வர்க்கத்தின் பயங்கரவாதத்திற்கு தளம்அமைத்துக் கொடுப்பதாகவும் அமைந்து விடுகின்றது.

அடிப்படையானதும், நீண்டகாலம் நிலை கொண்டதுமான ஏகாதிபத்திய முதலாளித்துவ ஆளும் வர்க்க பயங்கரவாதத்தை தனிநபர் பயங்கரவாதத்தால் தோற்கடிக்க முடியாது. "இம் என்றால் சிறைவாசம் ஏன் என்றால் வனவாசம்" என்ற கொடிய பயங்கரவாதி அடக்குமுறை நிலவிய ஜார் எதேச்சதிகாரத்தை முறியடித்தது தனிநபர் பயங்கரவாதம் அல்ல. மாக்சிசக் கொள்கையைக் கொண்ட தொழிலாளி வர்க்கத்தின் மக்களின் ஆயுதம் ஏந்திய புரட்சியேயாகும். அதேபோல் கிட்லரையும், ஜப்பானிய ஏகாதிபத்திய வாதிகளையும் தோற்கடித்த வழி மாக்சிச லெனினிசக் கொள்கையுடைய மக்களின் புரட்சிகரப் போராட்ட வழியே அன்றி பயங்கரவாதம் அல்ல.

ஆதலால் ஆளும் வர்க்கப் பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு, தோற்கடிப்பதற்கு மாற்று வழி தனிநபர் பயங்கரவாதமாக இருக்க முடியாது. மாக்சிசம் லெனினிசம் மாசேதுங் சிந்தனை காட்டும் புரட்சிகரப் பாதையாக மட்டுமே இருக்க முடியும்.

## தமிழர் கூட்டணியின்...

2-ம் பக்கத் தொடர்...

சப் பேச்சுகளை நிகழ்த்திக் கொண்டே ஜனாதிபதியுடன் ஒன்றரை மணித்தியாலம், இரண்டு மணித்தியாலம் என்று "அந்தரங்க பேச்சுவார்த்தைகள்" நடத்தும் அமீரிடம் கூர்மையுடையவர்கள் எதையும் எதிர்பார்க்க மாட்டார்கள். ஆயினும் இன்று வியாபாரக் கூட்டணி அரசியலில் பேரம் பேசி வியாபாரம் செய்யப்போகிறதா, அல்லது உரிமைப் போரையும், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரையும் கடைப்பிடிக்கப் போகிறதா என்பதைத் தமிழ் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். இப்பொழுது பொருளாதார-சமூகப்பிரச்சனைகள்-நாடு முழுவதற்கும் பொதுவாகிக் கொண்டிருக்கின்றன. சிங்கள உணர்வைவிட கட்சி உணர்வும், அரசியல் வேகமும் இருக்கிறபடியாலேயே கிழக்கு மாகாணத்தில் சிங்கள வாக்காளர் கூட்டணிக்குகூட வாக்களித்தனர். பிறுங்கியது லாபம் என்ற மனப்பாங்கில் இதனையும் மற்றொரு பாராளுமன்ற (மாவட்டசபை) வெற்றியாகக் கூட்டணி கருதுமானால், நிலைமையைத் தவறாக விளங்கிக் கொண்டதாகவே இருக்கும். தமிழ் மக்களும், சிங்கள முற்போக்கு-தேசபக்த சக்திக்கும் - கூட்டணியிடம் புரட்சியையோ, சோஷலிஸ பிரகடனத்தையே, எதிர்பார்க்கமாட்டார்கள். ஆனால் தமிழ் மக்களின் உரிமைப்போரையாவது, நேர்மையாகவும், விடாப்பிடியாகவும், ஒழுங்காகவும், நடாத்தவேண்டும் என எதிர்பார்ப்பது தவறல்லவே!

ஆனால் வரலாறு எந்த நம்பிக்கையையும் இதுவிஷயத்தில் தராது. கூட்டணியின் வர்க்க நிலைப்பாடும், பாராளுமன்ற விளையாட்டில் ஊறித்திளைத்த தன்மையும், அமிரின் தனிப்பட்ட கோளாறுகளும், கட்சியை சர்வாதிகாரியாக நடத்தும் முறையும், அது தொடர்ந்தும், கண்ணாமூச்சி விளையாட்டிலேயே காலம் கழிக்கும் என்று எண்ணவைக்கிறது. ஆகவே மக்கள் புரட்சிகர, சக்திகளை வளர்ப்பதன்மூலமே தமிழ் இனத்தை அடக்கும் சக்திகளையும் பாசிஸ சக்திகளையும் வென்று உண்மையான சுதந்திரத்தையும், பல்லின ஏற்புடைமையையும் இந் நாட்டில் உருவாக்கலாம்.

# இந்திய வெளிநாட்டுக் கொள்கையில் திருப்பம் ஏற்படுமா?

சீன - இந்திய உறவுகளைப் பற்றி சில வாரங்களுக்கு முன் இப்பகுதியில் நாம் எழுதியவை சிலருக்கு நினைவிருக்கலாம். பல வருடங்களாக சோவியத் செல்வாக்கிற்குள் சிக்கியிருந்த இந்திய வெளிநாட்டுக் கொள்கை சிறிது மாற்றமடையத் துவங்கும் அறிகுறிகள் தென்படுகின்றன எனக் குறிப்பிட்டிருந்தோம். ஆசியாவில் இரு பெரும் நாடுகளுக்குள் சுமுகமான உறவுகள் நிலவவேண்டும் என்றே சீனா கூறியும் கருதியும் வந்திருக்கிறது. எனினும் சோவியத் யூனியன் கடைப்பிடித்து வரும் சீன எதிர்ப்புக் கொள்கையின் ஒரு பகுதியாக இந்திய - சீன முரண்பாடுகளுக்குத் தூபம் இடப்பட்டு வந்தது. கடந்த இருபது வருடங்களாக கசப்புற்றிருந்த இந்திய-சீன உறவுகள் இப்பொழுது பரஸ்பர நலன்கருதும் பேச்சுவார்த்தைகள் என்ற நிலைக்கு வந்திருக்கிறது. அண்மையில் சீன வெளிவிவகார அமைச்சர் குவாங்-குவா புதுடில்லிக்கு விஜயஞ் செய்ததும், நரசிம்மராவ், இந்திராகாந்தி முதலியோருடன் உயர்மட்ட சந்திப்புகள் மேற்கொண்டதும் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளன. திடீர் மாறுதல்கள் எதுவும் உடனடியாக ஏற்படாவிட்டாலும் முக்கியமான ஒரு கட்டத்தில் ஆரம்பம் என்பதை மறுக்கவியலாது. நம்பிக்கை தரும் விதத்திலேயே பேச்சுவார்த்தைகள் நடந்தேறியுள்ளன. முற்போக்கு சக்திகளும், மூன்றாவது மண்டல நாடுகளும் ஓரளவு சந்தோஷப்படத்தக்க இந்த மாற்றத்தின் பின்னணி என்ன?

முதலாவது, எந்த முதலாளித்துவ நாட்டிலும் கடந்த இருபது முப்பது வருடங்களாக அந்நாட்டின் ஆளும் வர்க்கத்தினரிடையே வேறுபட்ட கண்ணோட்டமும், தந்திரோபாயமும் கொண்ட குழுக்கள் அல்லது பிரிவுகள் இருந்து வருகின்றன. முதலாளித்துவத்தை அந்த நாட்டிலும் வேறு நாடுகளிலும் கொண்டு நடத்தும் முறை பற்றிய கருத்து வேறுபாடே இம் முரண்பாட்டின் அடிப்படையாகும். மேலாதிக்க வல்லரசுகள் இரண்டும் உலகைக் கூறுபோட்டு செல்வாக்குடன் விளங்கிய சூழ்நிலையில், பல்வேறு முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஆளும் வர்க்கத்தினரிடையே சோவியத் யூனியனுடன் எத்தகைய தொடர்புகளையும் உறவுகளையும் வைத்துக் கொள்வது என்பது குறித்து மாறுபட்ட சிந்தனைகள் நிலவிவந்தன. சோவியத் யூனியனுடன் இராஜதந்திர உறவு, வர்த்தக உறவு, கலாசார-விஞ்ஞான உறவுகளை ஏற்படுத்தி ''மோதாமல்'' சிநேகபாவத்துடன் வாழ்ந்து, முதலாளித்துவத்தை நிலைக்கச் செய்யலாம் என்று ஒரு பிரிவினர் எண்ணுவர். மற்றொரு பிரிவினர், கெடுபிடி யுத்தப் போக்கில் சோவியத்யூனியனுடன் ஒட்டுமில்லை உறவும் இல்லை, என்ற தோரணையில் ''சுத்தமான'' முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்தினர். அடிப்படையில் இருபிரிவினருமே முதலாளித்துவ ஆட்சியை ஸ்திரப்படுத்துவதையும், உழைக்கும் வர்க்கத்தைப் பலவீனப்படுத்தி நசுக்குவதையுமே முக்கிய குறிக்கோளாகக் கொண்டவர்கள் நடைமுறையில் வேறுபாடே அல்லாமல் இறுதி நோக்கத்தில் அல்ல. ஏகாதிபத்தியக் கோட்டையும் தலைநகராயுமுள்ள அமெரிக்க நாட்டு ஆளும் வர்க்கத்திற்குள்ளேயே இது விஷயத்தில் வேறுபட்ட அபிப்பிராயங்களும் கண்ணோட்டமும் உண்டு! அவை அவ்வப்போது வெளிப்படுவதுமுண்டு! இங்கிலாந்து, ஜெர்மனி, அவுஸ்திரேலியா, யப்பான், முதலிய வளர்ச்சியடைந்த நாடுகளிலேயே இத்தகைய கருத்து வித்தியாசங்கள் இருக்கும் பொழுது இந்தியாவில் அது தோன்றியதில் வியப்பு எதுவும் இல்லை.

இத்தகைய பின்னணியிலேயே ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் இந்திய ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவு ''ஏகாதிபத்திய எதிர்ப்பு'' என்ற கோஷத்தின் விளைவாக ''சோவியத் நட்பு'' என்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தது, தாமும் முற்போக்குவாதிகள் என்று சில வட்டாரங்களில் பேசிக் கொள்ளவும் இந்த ''நட்புறவு'' பயன்பட்டது.

ரஷ்யா இதனை பயன்படுத்த தவறவில்லை. நிதி கடன் வழங்குதல், இராணுவ தளபாடங்களை பெருமளவில் விற்பனை செய்தல், கூட்டு தொழில் நிறுவனங்களை நிறுவுதல், பல்வேறு சேவைகளிலுள்ளவர்க்குப் பயிற்சியளித்தல் முதலியவற்றின் மூலம் இந்தியாவின் மிகப்பெரிய ''நட்புறவு'' நாடாக ரஷ்யா தன்னை ஆக்கிக் கொண்டது. இந்தநிலையைப் பயன்படுத்தி, நாட்டின் பல பகுதிகளிலும், பல மட்டங்களிலும் ஊடுருவல்கள் செய்து தனக்குச் சார்பானவர்களை வளர்த்துக் கொண்டது. குறிப்பாக இந்தியாவின் உயர் நிர்வாக சேவையிலே பலரை சோவியத் சார்பாக வளைத்து வைத்துக் கொண்டது. இதனாலேயே ஜனதா அரசு பதவியிலிருந்த காலத்தில் கூட நிர்வாக யந்திரத்தின் பல பகுதிகள் சோவியத் பக்கம் இழுத்துக் கொண்டிருந்தன. நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி என்று வரிசையில் வந்த இந்தியப் பிரதமர்கள் இரு வல்லரசுகளிடையே பெருமளவுக்கு சோவியத் யூனியனது வெளிநாட்டுக் கொள்கைக்கு ஆதரவாகவே சாய்ந்து நடந்து வந்தனர். இக்காரணங்களினால் கடந்த முப்பது ஆண்டுக்காலமாக இந்திய ஆளும் வர்க்கத்தின் பெரும்பான்மையினர் தமது சுயநலத்திற்காக உலக அரங்கில் சோவியத் சார்பான நிலைப்பாட்டை மேற்கொண்டு வந்தனர். ''இந்தியாவின் உற்ற நண்பன் சோவியத்யூனியன்'' என்ற சுலோகமும் பிரசாரம் செய்யப்பட்டது. எதற்கும் சோவியத் தலைவர்களுடன் கலந்தாலோசித்தல் நல்லது என்ற கருத்தும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அண்மையில் சீனா உதவிப் பிரதமர் விஜயஞ் செய்து நடாத்திய பேச்சுவார்த்தைகளைப் பற்றி அறிவிப்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ் இப்பொழுது மொஸ்கோ செல்வது பழக்கத்தின் இறுக்கமான பிடியின் தொடர்ச்சியையே வெளிக்காட்டுகிறது. இப்படியெல்லாமிருந்தும், இந்திய வெளிநாட்டுக் கொள்கையிலே சிற்சில மாற்றங்கள் ஏற்படத்தான் போகின்றன.

இதற்கு முக்கியமான சில காரணங்கள் உண்டு. முதலாவதாக, இன்றைய சர்வதேச அரசியல் அரங்கின் நிலையே இந்தியாவைத் தூண்டுகிறது எனலாம். மேலாதிக்க வல்லரசுகளான அமெரிக்காவும் ரஷ்யாவும் தொடர்ந்து உலகை அச்சுறுத்தி ஆக்கிரமித்துக் கொண்டிருந்தாலும் மூன்றாவது உலக நாடுகள் இன்று குறிப்பிடத்தக்க சக்தியாக உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அண்மைக்காலத்தில் மூன்றாவது உலகநாடுகள் மத்தியில் தான் ஓரளவு தனிமைப்பட்டுப் போனதை இந்தியா உணர்ந்துவிட்டது. ''மூன்றாவது உலக நாடுகளின் இயல்பான நேச நாடு சோவியத் யூனியன்'' என்று கியூபா, வியத்நாம் முதலிய நாடுகள் கூறுவதை யதார்த்த நிலையாகக் கொள்ள முடியாததை இந்தியா கண்டு கொண்டது. சீனா உட்பட பல்வேறு பெரு நாடுகளும் சிறிய நாடுகளும் இன்று உலக அரங்கில் முக்கியமாயிருக்கின்றன. எனவே தான் அமெரிக்க - ரஷ்யா ஆகிய இரண்டுமே உலகம் என்ற கணக்கிலிருந்து விடுபட்டு, தனது உறவுகளை பன்முகப்படுத்த இந்தியா முற்படுகிறது; அதன் விளைவே சீனாவுடனான பேச்சுவார்த்தைகள். ★

## உலக அரங்கில் — அங்கும் இங்கும்

# ஈரானின் அவலம்!

கடந்தமாத இறுதியில் ஈரானின் தலைநகரான தெஹ்ரானிலே நடந்த சம்பவங்கள் அந்த நாட்டின் ஸ்திரமற்ற நிலையை மீண்டும் புலப்படுத்தியுள்ளன. பிரச்சினைகள் இல்லாத நாடு இல்லை என்பது யாவரும் அறிந்ததே. ஏகாதிபத்தியங்கள் செல்வாக்கிற்காகப் போட்டா போட்டியில் மும்மரமாக ஈடுபட்டிருக்கும் சூழ்நிலையில் எந்த ஒரு நாடும் அந்நியத் தலையீடு இல்லாமலோ, செல்வாக்கு இல்லாமலோ தனது விவகாரங்களை நடாத்துவது இயலாமலுள்ளது. ஏகாதிபத்தியங்கள் இருக்கும்வரை இந்தப்பதட்ட நிலையும் ஆபத்தும் இருந்து கொண்டே வரும். ஈரான் இந்த அவலத்துக்கு எடுத்துக் காட்டு.

ஈரானிய ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டதும், அவர் தலைமறைவாகித் தப்பியோடியதும், அதனையடுத்து குண்டு வெடிப்புகள் ஏற்பட்டதும், அந்நிய சக்திகள் ஈரானின் உள்நாட்டு விஷயங்களில் எவ்வாறு நேரடியாகத் தலையிடுகின்றன என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கின்றன. ஜூன் இருபத்தெட்டாம் திகதி தெஹ்ரானிலே இஸ்லாமிய குடியரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்திலே வெடித்த பெரிய குண்டு பலரைக் கொன்றது. கட்சியின் தலைவரும், கொமெனியின் சிரேஷ்ட ஆதரவாளரும், பிரதம நீதியரசருமாகிய மொகம்மத் பெஹெஷ்தி உட்பட பல அமைச்சர்களும் நாற்பது பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த குண்டு வெடிப்பின்போது கோரமான முறையில் உயிர் இழந்தனர். உள்நாட்டு யுத்தத்தை உருவாக்கக் கூடிய அளவுக்கு நிலைமை கூர்மை அடைந்து வருகிறது.

இது ஈரானிய ஆளும் கட்சியினரிடையே வெடித்துள்ள முரண்பாட்டின் பிரதிபலிப்பேயாகும்.

இஸ்லாமிய குடியரசுக் கட்சியின் தீவிரவாதிகள்-குறிப்பாக மதத்தலைவர்கள்-மத அடிப்படையிலான ஓர் ஆட்சியையே நிலைநாட்ட விரும்புகின்றனர். மேற்குலக ஆதரவும் வேண்டாம், கிழக்குலக (சோவியத் வட்டத்து) ஆதரவும் வேண்டாம்; இஸ்லாமிய பாதையே போதும்'' என்பது மதவாதிகளின் கோஷம். மேற்கத்தைய ஜனநாயக பாணியிலான அரசாட்சிமுறை, அமெரிக்காவுடன் கூடுதலான தொடர்பும் உறவும், நிரந்தர இராணுவத்துக்கு அதிகரித்த அதிகாரங்கள் என்பது பாணிசதர் வைத்த வாதம். பழைய இராணுவம் ஷாவினால் உருவாக்கப்பட்டதால் அது முற்றிலும் நம்பக்கூடியதல்ல என்பது மதவாதிகளின் வாதம். அதனாலேயே ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்துக்கும் நடந்த பலப்பரீட்சையின் விளைவாக, ஜூன் பதினோராம் திகதி பாணிசதரை பிரதம படைத்தளபதி பதவியிலிருந்து கொமேனி நீக்கினார். மொத்தத்தில் மாஜி ஜனாதிபதி பாணிசதர் அமெரிக்க ஆதரவாளராக இருந்தார் என்பதை மறுக்க முடியாது அமெரிக்க மத்திய உளவறியும் நிறுவனம் அவருக்கு வெவ்வேறுவகைகளில் உதவி வழங்கியது பகிரங்க ஊகமாகும். தருக்க ரீதியான முடிவாக ஈரானை இறுதியில் மேற்கத்திய வட்டத்திற்குள் பாணிசதர் இட்டுச் சென்றிருப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

மறுபுற இஸ்லாமிய குடியரசுக் கட்சியின் மதப்பிரிவினர் நடு நிலைமையை வற்புறுத்தும் அதே வேளையில் உருப்படியான பொருளாதார - சமூக - திட்டங்களை வகுக்கக்காணோம். வளிநாட்டுக் கொள்கை மக்களுக்குச் சோறு போடமாட்டாது. மத உணர்வுகளினால் மாத்திரம் மக்கள் ஷாவிற்கு எதிராக எதிர்த்துக் கிளம்பவில்லை. வறுமை, சுரண்டல், அடக்குமுறை ஆகியவற்றை எதிர்த்தே மக்கள் மதத்தின் பெயரில் எழுந்தனர். ஆயினும் குடியரசுக்கட்சி இன்னும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை; களையெடுப்புக்களிலும், அரசு யந்திரத்தை இஸ்லாமியமயப்படுத்துவதிலுமே நேரத்தை போக்குவதாகத் தெரிகிறது. குறிப்பாக நிலச்சீர்திருத்தம் உடனடியாக மேற்கொள்ளப் பட வேண்டும்.

இந்த நிலைமையிலேயே ரஷ்யா பலவழிகளில் ஈரானில் தலையிட்டு வருகிறது. எல்லைப்புற நாடு என்ற சாட்டிலும், அமெரிக்க எதிர்ப்பு என்ற பெயரிலும் நாட்டில் பல எதிர்ப்பு சக்திகளுக்கு உற்சாகமும் உதவியும் அளிப்பதாக ஈரானியர் பலர் குற்றம் சுமத்தியிருக்கின்றனர். தெருச்சண்டைகள் பலவற்றுக்கு சோவியத் தூண்டுதல் ஏதுவாக இருக்கலாம், என்று சந்தேகிக்கப்படுகிறது.

சுருங்கச் சொன்னால் அமெரிக்க ரஷ்யா போட்டா போட்டி ஈரானை வெகுவாகப் பாதிக்கிறது. அதிதீவிரமான மதவாதியாகத் தோற்றமளித்தாலும் அயத்தொல்லா கொமெனி நடைமுறையில் பல விஷயங்களில் நடுநிலைமை வகித்து வந்திருப்பது கவனிக்கக்கூடியது. நாட்டின் ஸ்திரப்பாட்டில் கொமெனிக்கு மிகுந்த கவனம் உண்டு. அவர் தான் முரண்படும் சக்திகளையும் குழுக்களையும் பிரிவுகளையும் ஒருவாறு இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறார். பலர் நினைப்பது போல கொமெனி அராஜகவாதி அல்ல. தான் தந்திரம் மிக்க அரசியல் தலைவர் என்பதை கொமெனி தக்கவாறு காட்டியிருக்கிறார். ஆனால் ஈரானின் பிரச்சினைகளை முழுமையாக எதிர்நோக்கவும், நாட்டை முன்னெடுத்துச் செல்லவும் கொமெனி மாத்திரம் போதாது! அவருடைய மதியூகமும் ராஜதந்திரமும் மாத்திரம் போதாது. மக்கள் என்ன எண்ணுவார்கள் என்பதே முக்கியமாகும். மக்களுக்கு ஏற்படப்போகும் முன்னேற்றங்களைப் பொறுத்தே அவர்கள் இந்தனை அமையும். அடுத்து வரும் மாதங்கள் ஈரானைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானவையாயிருக்கும். ★

# வடபகுதிச் சம்பவங்கள் அநாகரிகமானவை

## 'லக்மக' பத்திரிகையில் அறிக்கை •

ஜயவர்த்தன அரசாங்கம் தனது பாதுகாப்புப் படைகள் மூலம் இலங்கையின் வடபகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதாகக் கூறிக் கொண்டு கட்டவிழ்த்துவிட்ட அரசாங்கப் பயங்கரவாதத்தை எவரும் கண்டிக்காமல் இருக்கமுடியாது.

வடக்குக் கிழக்கில் அரசியல் நோக்கம்கொண்ட தனிநபர்களினதும் அல்லது குழுக்களினதும் பயங்கரவாத நடவடிக்கைகளை நாம் எந்தவகையிலும் அங்கீகரிக்கவில்லை, இறுதி ஆய்வில் பார்த்தால்

> வடபகுதிச் சம்பவங்கள் சம்பந்தமாக உழைக்கும் மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் எச். எல். கே. கரவிட்ட அவர்களினால் வெளியிடப்பட்ட இவ்வறிக்கை சிங்கள முற்போக்கு இதழான 'லக்மக' பத்திரிகையின் யூலைமாத இதழில் வெளிவந்ததாகும், (ஆ-ர்.)

இத்தகைய பயங்கரவாதம் பிற்போக்கிற்கே சேவைசெய்யும். ஆதலால் சகல முற்போக்குவாதிகளும் பயங்கரவாதத்தைக் கண்டிக்கவேண்டியவர்களாகவே உள்ளனர்.

சட்டரீதியாகவே யாழ்ப்பாணத்தில் தனிநபர்களின் அல்லது குழுக்களினதும் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக்கூடியதாக இருந்தும் ஜயவர்த்தன அரசாங்கம் அதன் பொலீஸ் மற்றும் பாதுகாப்புப்படைகளின் மூலமாக கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாதத்தை நாம் எந்த வித தயக்கமும் இன்றிக் கண்டிக்கிறோம்.

கடைகள், சந்தைகள், தேனீக்கடைகள், வாகனங்கள், தனிநபர்கள் அரசாங்கத்தினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட பயங்கரவாதத்திற்கு இலக்காயின. முழுத்தேசத்தின் பொக்கிசங்களில் ஒன்றான யாழ் நூலகமும் பெருநாசத்திற்குள்ளானது. அரசாங்கப் பயங்கரவாதிகளின் வெறுப்பு புத்தகங்கள் மீதும் இருந்தது. புத்தகங்களை நாசம் செய்தபின் திருப்தியடையாத அப்பயங்கரவாதிகள் கொழும்புக்கு வெளியே வெளிவரும் ஒரே ஒரு தினசரியான ''ஈழநாடு'' பத்திரிகைக் காரியாலயம் அச்சகத்தைத் தீக்கிரையாக்கி தரைமட்டமாக்கினர்.

நாகரீகமடைந்த தேசங்கள் யுத்தகாலத்திற்கூடச் சில விதிகளைக் கடைப்பிடிப்பதுண்டு. எதிரியின் பிரதேசத்திற்குள் உள்ள ஆஸ்பத்திரிகள் நூலகங்கள் தாக்கப்படுவதில்லை ஆனால் ஜெயவர்த்தன அரசாங்கத்தின் ஆயுதப்படைகளுக்கு நாகரீக நடைமுறை என்பது அற்பமும் இருக்கவில்லை.

வடக்கின் பிரச்சினைகளுக்கு அரசாங்கப் பயங்கரவாதம் அல்லப் பரிகாரம். இவ்வாறான நடவடிக்கைகள்பிரச்சினையின் தீர்வுக்குப் பதிலாக பிரிவினைவாதிகளுக்கு மேலும் தூண்டுகோலாகவே அமையும். இலங்கையின் சுதந்திரம், ஐக்கியம் பிரதேசப் பாதுகாப்பு என்பன பாதுகாக்கப்பட வேண்டுமானால் சகல வடிவங்களிலுமான பயங்கரவாதம் தவிர்க்கப்படுவதுடன் வடக்கு—கிழக்கு மக்களின் நியாயமான உரிமைகள் யாவும் வழங்கப்படல்வேண்டும்.

அரசாங்கப் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளோ அன்றிப் பிரிவினைவாதிகளின் நடவடிக்கைகளோ வடக்கு—கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கமாட்டாது. ஆனால் இவ்விரு சக்திகளும் முழுநாட்டையும் குழிதோண்டிப் புதைப்பதற்கு முனையும் இரு வல்லரசுகளுக்கும் சேவைசெய்து தமது கைங்கரியத்தில் வெற்றி கொள்ளமுடியும். வடபகுதியில் ஜயவர்த்தன அரசின் கொள்கைகளும், பிரிவினைவாதிகளின் பிரச்சாரமும் ஒன்றுக்கொன்று சேவை செய்வதுடன். இலங்கையின் சிங்கள-தமிழ் மக்கள் உட்பட சகல மக்களுக்கும் நிவிர்த்திசெய்ய முடியாத தீங்கையே விளைவிக்கும் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றோம்.

# யூ. என். பி. ஆட்சி கட்டவிழ்த்து விட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் நாளிலேயே அதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்க முடியும். அரசாங்க உத்தரவுகளை நடைமுறைப்படுத்தக் கூடிய உயர் அதிகாரிகளும், ஆயுதப்படைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய உயர் தளகர்த்தர்களும், ஏனைய மந்திரியர்கள் சிலரும் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு இருக்கக் கூடியதாகவே ஆயுதப் படைகளின் அட்டகாசம் யாழ்ப்பாணத்தைச் சுட்டெரித்தது என்றால் அதன் அர்த்தம் என்ன என்பதை மக்கள் பூரணமாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே அரசும் யூ. என். பியும் தனது பயங்கரவாதத்தை தென்னிலங்கையிலும், மலையகத்திலும் காட்டி வந்துள்ளது. வேலை நிறுத்தங்களை முறியடித்தும், அதில் சோமபாலா என்ற ஊழியர் இப்பயங்கரவாதத்திற்கு பலியாக்கப்பட்டதும், பலர் தாக்கப்பட்டு படுகாயங்களுக்கு ஆளாக்கப்பட்டதும், யாவரும் அறிந்ததே. அதே போல் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்படுவது, அவர்களது லயன்கள் உடைக்கப்படுவது போன்ற வன்முறைச் சம்பவங்கள் எல்லாம் இத் தார்மீகம் பயங்கரவாதத்தின் ஒரு அம்சமேயாகும். இந்த வரிசையில் தான் யாழ்ப்பாணத்திலும் தார்மீகம் தனது கைவரிசையைக் காட்டியுள்ளது. இந்த உண்மையை மறைத்து சில பொலீசார் மட்டுமே யாழ் சம்பவங்களுக்கு காரணம் என யாராவது கூறமுற்பட்டால் அவர்கள் யூ. என். பியின் பாசிசத் தன்மைக்கு திரை போட்டு ஆட்சிக்கு ஆதரவு கொடுப்பவர்களாகவே கணிக்கப்படுவார்கள். வெந்த புண்ணில் வேல் பாச்சப்பட்ட நிலையிலேயே இன்று தமிழ் மக்கள் உள்ளனர். தமிழர் கூட்டணியின் தலைமையோ அன்றி வேறு எவருமோ கடந்த காலத்தைப் போல் ''பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்'' என்ற நிலையில் யூ. என். பி. யுடன் நடந்து கொள்ளக்கூடாது. உறுதியாக நாட்டின் ஏனைய முற்போக்கு, ஜனநாயக, தேசபக்த சக்திகளோடு இணைந்து யூ. என். பியையும் அதன் தார்மீக வேஷம் கொண்ட பாசிசப் பயங்கரவாதத்தையும் எதிர்த்துப் போராட முன்வரவேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாகும்.

தானே உருவாக்கி, தானே வழிநடத்திய யாழ்-வன்முறைச் சம்பவங்களை விசாரிக்க அரசுதானே ஆணைக்குழு ஒன்றை நியமிக்க இருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. இது வெறும் அர்த்தமற்ற பேச்சேயாகும். 77ம் ஆண்டு இனக் கலவரத்திற்கு நியமிக்கப்பட்ட சன்சோனி ஆணைக்குழு என்னவாயிற்று. 79ல் யாழ்ப்பாணத்திற்கென பிறப்பிக்கப்பட்ட அவசர காலச் சட்டத்தின் கீழ் நடைபெற்ற சம்பவங்களை விசாரிக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழு எதைச் சாதித்தது; ஆணைக்குழுக்கள் திசைதிருப்பலும் கண்துடைப்புக்களும் மட்டுமேயாகும்.

நடைபெற்று முடிந்த வன்செயல்களின் முழுப் பொறுப்புதாரி அரசாங்கம் தான் என்பதால், அச்சம்பவங்களினால் உயிர்களை இழந்துள்ள குடும்பங்களுக்கும், தீக்கு இரையான தனியார் - பொது நிறுவனங்களுக்கும், ஏனைய சேதங்களுக்கும அரசு போதிய நஷ்டஈட்டை வழங்க வேண்டும். அத்துடன் மேலதிகமாக கொண்டு வந்து குவிக்கப்பட்டுள்ள ஆயுதப்படைகளை வடபகுதியில் இருந்து உடன் வாபஸ் வாங்க வேண்டும்.

# ஜே.ஆர். காலில் போட கல்லைத் தூக்கிறார்!

கடந்த வருடம் யூலையில் வேலை நிறுத்தம் செய்த 40 ஆயிரம் ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு ஒருவருடம் முடியப் போகும் இவ்வேளையிலும் அரசாங்கம் வேலை கொடுக்க மறுத்து வருகின்றது. இதனால் இந்த நாற்பதினாயிரம் ஊழியர்களை மட்டுமன்றி அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த லட்சக்கணக்கானவர்களையும் பட்டினி நிலையில் வைத்து வாட்டி வதைத்து வருகிறது இன்றைய தார்மீக அரசாங்கம். இப்படிச் செய்வதன் மூலம் வேலை நிறுத்தம் செய்தோரை அடிபணிய வைக்கலாம் என அரசு எதிர்பார்க்கின்றது. ஆனால் அப்படி நினைப்பது ஆட்சியினரது மூட்டாள் தனத்தையே எடுத்துக் காட்டுகின்றது. தாங்கள் வேலை நிறுத்தம் ஒன்றை முறியடித்து விட்டதாக ஜே. ஆரும் அவரது சகாக்களும் குதூகலிக்கலாம் ஆனால் தமது கால்களை எங்கே புதைத்திருக்கின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளாமலேயே அவர்கள் கும்மாளம் அடிக்கின்றார்கள். அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசிய பிரதி அமைச்சர் ஒருவர் ஜே. ஆரின் மதியூகத்தைப் பற்றி வானளாவப் புகழ்ந்தார். அதாவது வேலை நிறுத்தம் என்ற பெயரில் டி. எஸ் சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, சேர் ஜோன் கொத்தலாவலை போன்றவர்களை ஆட்டிப்படைத்தவர்களால் எமது அதி உத்தம ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவை ஆட்டிப்படைக்க முடியவில்லை. ஏனென்றால் அவர், வேலைநிறுத்தத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டார் எனப் பெருமையாக அப்பிரதி அமைச்சர் பேசினார்: அவரது பேச்சின் சாரம் சிலவேளை தற்காலிகமானதொரு வெற்றியாக இருக்க முடியும். ஆனால் யூ. என். பி. யின் பாசிச சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து நாட்டின் மூலை முடுக்கெல்லாம் உருவாகி வரும் எதிர்ப்புணர்வை அப்பிரதி அமைச்சர் உணரத் தவறிவிட்டார். ''முட்டாள்கள் கல்லைத் தூக்குவது முடிவில் தமது கால்களில் போட்டுக் கொள்வதற்கே'' என்ற சீனப் பழமொழி போல் வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு எதிரான பெரும் கல்லை ஜே. ஆர். தூக்கியுள்ளார். ஆனால் அக்கல்லை அவரால் நீண்டகாலம் தூக்கி வைத்திருக்க முடியாது. இறுதியில் தனது காலில் போட்டுக் கொள்ளும் காலம் நெருங்கிக் கொண்டே வருகின்றது என்பதை அவரும் அவரது சகாக்களும் உணராவிட்டாலும் மக்கள் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றனர். ஆதலால் வேலை நிறுத்தம் செய்தோருக்கு மீண்டும் வேலை கொடு என்ற சுலோகத்தை மக்கள் முன் பிரசாரம் செய்து அதை யூ. என். பி. எதிர்ப்பு இயக்கத்துடன் ஒன்றிணைத்து முன்னெடுக்க வேண்டியது சகல யூ. என். பி. விரோத சக்திகளினதும் முக்கிய பொறுப்பாகும்.

# அடுத்த தேர்தலுக்கு.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தேர்தல் நடாத்தப்பட்டவிதமும் அதில் அரசாங்கத்தின் ஒளிவு மறைவு அற்ற ஊழல் மோசடிகளும் நாட்டின் சகல மக்களையும் நன்கு சிந்திக்க வைத்துள்ளது. சிலர் நினைப்பது போல் இது யாழ் மாவட்டத்திற்கு மட்டும் நடைபெற்ற ஒரு சம்பவமல்ல. இதில் ஒரு ஒத்திகை பார்க்கப்பட்டுள்ளது. ஒத்திகை நல்ல படியாக ஒப்பேறவில்லை என்பதில் அரசுக்கு மனத்தாங்கல் ஏற்பட்டாலும், இந்த அனுபவங்களைக் கொண்டு எதிர்காலத்தில் எவ்வாறு மோசடியும் ஊழலும் கொண்ட தேர்தலை நடாத்தி தனிக் கட்சி சர்வாதிகாரத்தை நிலை நிறுத்தலாம் என்பதிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வருகின்றது.

யாழ் மாவட்டத்திலே நடைபெற்ற மோசடியும் ஊழலும் நிறைந்த தேர்தல் நடைமுறைகள் மக்களுக்கு ஓரளவு தானும் முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயக ஏமாற்றின் தன்மையை உணர வைத்துள்ளன ஆளும் வர்க்கங்களினால் போற்றப்படும் அவர்களது பாராளுமன்ற ஜனநாயகத்தின் சுயரூபத்தையும், பெருமதிமிக்க சர்வஜன வாக்குரிமை என்று ஒலம் வைக்கப்படும் வாக்களிக்கும் உரிமைக்கு ஏற்பட்ட நிர்க்கதியும் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற ஏமாற்று வித்தையை அம்பலமாக்கியுள்ளது.

இத்தகைய ஏமாற்றும் மோசடியும், ஊழலும் கொண்ட அமைப்புக்குள் மக்கள் அமைதியாக வாழவேண்டும் என்று யாராவது போதிப்பார்களேயானால் அவர்களைப் போன்ற மக்கள் துரோகிகள் வேறு யாருமே இருக்கமுடியாது.

ஊழலும், மோசடியும், ஏமாற்றும், வஞ்சகத்தனமும் கொண்ட முதலாளித்துவப் பாராளுமன்ற நடைமுறைகளில் நீண்ட காலம் ஊறித் திளைத்த உழைக்கும் மக்களை அதில் இருந்து விடுபடச் செய்து உண்மையான போராட்டப் பாதையில் அணிவகுக்கச் செய்வது அவசியமாகும். முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகம் மக்களுக்கு அளித்து வந்த குறிப்பிட்ட சலுகைகளுக்கான எல்லைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. இனிமேல் அப்பட்டமான பாசிச சர்வாதிகாரம் தான் நடைபெறும் என்பதை யூ. என். பி. ஏற்கனவே முன்னறிவிப்புச் செய்துள்ளது. ஆதலால் மக்கள் முன் உள்ள ஒரே பாதை பழைய சலுகைகளை எதிர்பார்த்து ஏமாறுவதல்ல. புதிய நிலையில் போராட்டங்களை முன்னெடுப்பதேயாகும்.

அச்சுப்பதிப்பு : யாழ்ப்பாண அச்சகம், 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்;
வெளியீடு: சி. நவரத்தினம்15/1, மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்